**கவனிக்க.-** *2022.08.19 ஆந் திகதிய 2294 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியவற்றின் தமிழ் மொழிமூலம் பிரதிகள் பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2295 - 2022 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2022.08.26**

*2295 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 224 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை சட்டமூலம் 2022, ஓகத்து 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2022, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


233 - B 082375 - 353 (2022/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வெளியிடும் பிரதியை இரத்துச் செய்தல் (104 ஷரத்து) சம்பந்தமான அறிவித்தல்.

வடமேல் மாகாண சபை குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய - தெற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச திசானாயக முதியன்சலாகே அனுர குமார திசாநாயகவாகிய நான், இவ் அபிவிருத்தி சட்டத்தின் 19 (H) ஷரத்தின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களால் 1987, மே 18 ஆந் திகதி அன்பளிப்பு செய்து இலக்கம் குரு/பிர 16984 இல் மூலப் பிரதியில் உரிமையாளர் கிரின்தவ, கிரின்தவவில் வசிக்கும் விக்ரமசிங்க முதியன்சலாகே டிங்கிரி பண்டாவுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டு குளியாப்பிட்டிய மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் குளி/ கே/ 7 /291 கீழ் 1987, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டு அவருடைய இறப்பில் விக்ரமசிங்க முதியன்சலாகே சேனாரத்ன பண்டார என்பவருக்கு குளி/B /5/80 இல் 2020.11.12 ஆந் திகதி முதல் உரிமை வழங்கப்பட்டு கீழ் உள்ள உப ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ள இடத்துக்கு பதிலாக நீதியான முறையில் உரிமை ஒருவர் இல்லாதவிடத்து அல்லது உரிமையாளர் இருப்பாரானால், அவருக்குப்பதிலாக விருப்பமில்லாமல் அதற்குப் பதிலாக வேறொருவரை நியமிப்பதற்கு இல்லை என தகவலில் உள்ளதென கொடுப்பனவு பத்திரத்தில் 104 ஆம் பிரிவின் கீழ் நிராகரிப்பதற்கு செயற்படுவதாக தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பான எதிர்ப்பு இருந்தால் அவர் 2022.09.26 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### உப ஆவணம்

குருநாகல் நிருவாக மாவட்டத்தில் குளியாப்பிட்டிய - தெற்கு பிரதேச செயலகத்தில் யடிகஹ தெற்கு கோரலே 1143 - கிரின்தவ கிராம அலுவலர் பிரிவு இது கிரின்தவ என்ற கிராமத்தில் அமைந்திருந்தாலும், சர்வே ஜெனரல் மற்றும் சர்வே ஜெனரல் மூலம் குருநாகல் நில அளவையாளரால் தொகுக்கப்பட்ட களப்பத்திரிகை எண். 7 இல் வெட்டு முறிப்புத் திட்ட இலக்கம் 2353 இன் காணி இலக்கம் 243 எனக் காட்டப்பட்டுள்ள போதிலும் இதன் அளவு 0.382 ஹெக்டேயார் விசாலமானது ஆகும். நிகலந்த ஹேனா பெயருடைய எல்லையாகக் கொண்ட அரச காணியும் பின்வருமாறு.

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 242 உம் 136;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 136 உம் 244;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 244;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 125 உம் 242.

டீ. எம். ஏ. கே. திசாநாயக்க,
பிரதேச செயலாளர்/பிரதேச செயலகம்.

குளியாப்பிட்டி,
2022.04.26.

08-222

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/12295
மாகாணக்காணி ஆணையாளரின் இலக்கம். : மா.கா.ஆ./6/ கொ/138.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட 472 ஏ பகள போமிரிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பஹள போமிரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் Kaduwela DS/2012/11/01 ஆம் இலக்க சுவடுபடத்தில் காணித்துண்டு இல. A என காட்டப்பட்டுள்ள - ஹெக்டயர் ஏக்கர் றூட் 86 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டு திரு. யசலால் லக்சிரி விக்ரமாரச்சி விண்ணபித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 01, CO/ KDW/ 2007/ 271 சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 02 மற்றும் 04 இன் ஒரு பகுதி;

கிழக்கு : வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பாதை மற்றும் காணித்துண்டு டி ;
தெற்கு : காணித்துண்டு டி;
மேற்கு : காணித்துண்டு டி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .- முப்பது (30) வருடங்கள் (மான்புமிகு அமைச்சர் அனுமதித்த 2022.06.06 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2 %ஆகும். 2022 ஆம் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் நேர் முன்னைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறிவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தின் 20% கூட்டப்பட்டு குத்தகைப் பணம் அறவிடப்படவேண்டும்.

<u>தவணைப்பணம்:</u> தவணைப்பணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.06.06 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்பட வேண்டும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

என். எம். ரி. ஜானிகா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.08.09.

08 - 223

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/27850.
மாகாணக்காணி ஆணையாளரின் இலக்கம். : மா.கா.ஆ./06/ கொ/390.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கொழும்பு மாவட்டம், ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட இலக்கம் 519 நுகேகொட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாகொட எனும் கிராமத்தில்/நகரில் அமைந்துள்ளதும் பிபிகொ 7826 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 49 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0066 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதுமான காணியை வதிவிட நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டு திரு. வெலே பேடிகே பிரியந்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 48 மற்றும் 36;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 36 ;

தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 59 மற்றும் 2;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 2 மற்றும் 48.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் 2025.06.14 வரை) குத்தகைக்காலம்;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடைந்த பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

*தவணைப்பணம்:* காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை குடும்பத்தில் கீழ்க்குத்தகை மற்றும் தவிர்ந்த வேறு கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமான கைமாற்றங்களில் அனுமதிக்கப்படமாட்டாது. இந்தக் குத்தகைக்கான அளிப்பு 1995.06.15 இன் 5 வருடங்களின் பின்பு உரிமை ஆகும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

என். எம். ரி. ஜானிகா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகதமெதுர''.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.08.10.

08 - 224

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/27861.
மாகாணக்காணி ஆணையாளரின் இலக்கம். : பலாத். இ. கொ/06/ கொ/390.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கொழும்பு மாவட்டம், ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட இலக்கம் 519 நுகேகொட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி.பி.கொ 7826 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 66 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0065 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதுமான காணியை வதிவிட நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. நாவல பரம்பில் உதயகுமார என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ளகாணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : வீதி அபிவிருத்தி அதிகார சபை;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 65 மற்றும் 67;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 71;
மேற்கு : வீதி அபிவிருத்தி அதிகார சபை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்னைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் 2025.06.14 வரை) குத்தகைக்காலம்;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால்

மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடைந்த பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

*தவணைப்பணம்:* காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை குடும்பத்தில் கீழ்க்குத்தகை மற்றும் தவிர்ந்த வேறு கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமான கைமாற்றங்களில் அனுமதிக்கப்படமாட்டாது. இந்தக் குத்தகைக்கான 1995.06.15 இன் 5 வருடங்களின் பின்பு உரிமை ஆகும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

என். எம். ரி. ஜானிகா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.08.09.

08 - 225